# காலிங்கராயனுக்கு அரசு விழா நடத்தப்படுமா?

ஈரோடு: காலிங்கராயனுக்கு அரசு விழா நடத்த வேண்டும் என்று கொங்கு ஆய்வு மைய ஆய்வாளர் புலவர் செ.ராசு கோரிக்கை விடுத்துள்ளார்.

ஈரோடு அருகே வெள்ளோடு கனகபுரத்தில் நடைபெற்ற காலிங்கராயன் அணை, வாய்க்கால் அர்ப்பணிக்கப்பட்ட 732-ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சியில் அவர் பேசியதாவது:-

வெள்ளோடு கனகபுரத்தில் கொங்கு வேளாளர் மரபில் சாத்தந்தை குலத்தில் பிறந்த காலிங்கராயன் பவானி, நொய்யல், அமராவதி ஆகிய நதிகளை இணைக்க முயற்சி செய்து நதிகள் இணைப்புக்கு முன்னோடியாகத் திகழ்ந்தார். வாய்க்காலை வெட்டிய அவர் பொது மக்களுக்கு அர்ப்பணித்துவிட்டு, இந்த வாய்க்காலை தனது குடும்பத்தினர் பயன்படுத்தக்கூடாது என இம்மாவட்டத்தைவிட்டு வெளியேறினார். பொது வாழ்வில் ஈடுபடுபவர்கள் தன்னலம் கருதாமல் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு எடுத்துக் காட்டாக விளங்கினார். சாமை விளையும் இடம் எல்லாம் சம்பா விளையும் நிலையை உருவாக்கினார்.

பல்வேறு நற்செயல்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்த காலிங்கராயனுக்கு அஞ்சல் தலை வெளியிட வேண்டும். வெள்ளோட்டில் அரசு சார்பில் விழா நடத்த வேண்டும்.

அங்கு மணி மண்டபம் மற்றும் நினைவுத்தூண் கட்ட வேண்டும் என்றார்.

இந்நிகழ்ச்சியில் வெள்ளோடு பெருமாள் கோவில் திருப்பணிக் குழுத் தலைவர் கே.சின்னுச்சாமி, காலிங்கராயன் பாசன சபைத் தலைவர் வி.எம்.வேலாயுதம் உள்பட பலர் பங்கேற்றனர்.